Koviloor Digital Library

ஓம்
சத்குரு பாதம்

5-6

சத்குரு சரணாரவிந்தம்

உ கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்
5456
R65

எழுதி - வெளியிட்டவர் :
P. S. தண்டபாணி செட்டியார்.
(பட்டுக்கோட்டை)

ACC. NO.
5456.

வெளியீடு :
ஸ்ரீஞானனந்த தபோவனம்
தபோவனம் அஞ்சல்
அரகண்டநல்லூர் வழி : : தென் ஆற்காடு மாவட்டம்
1974

Koviloor Digital Library

ஓம

Koviloor Digital Library

சத்குருபாதம்

சத்குரு சரணாரவிந்தம்

எழுதி - வெளியிட்டவர் :

P. S. தண்டபாணி செட்டியார்.

(பட்டுக்கோட்டை)

வெளியீடு :

ஸ்ரீஞானனந்த தபோவனம்

தபோவனம் அஞ்சல்

அரகண்டநல்லூர் வழி : : தென் ஆற்காடு மாவட்டம்

1974

Koviloor Digital Library

" தந்தைதா யாவானும் - சார்கதி யிங்காவானும்
அந்தமிலா இன்பமெனக் காவானும்—எந்தமுயிர்
தானுகுவானும்—சரணுகுவானும்
கோனுகுவானும் குரு ! "

— *குருகீதை (தமிழ்)*

Koviloor Digital Library

ஓம்
சத்குருபாதம்

" சத்குரு சரணாரவிந்தம். "

(1)

சத்குரு தேவரின் சரணாரவிந்தங்களுக்கு அநேக கோடி நமஸ்காரங்களைச் செலுத்திக் கொள்ளுவோம்!! அருள்ஞான வள்ளலாகிய ஸ்ரீலஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் அவர்களுடைய பொன்னார் திருவடிகளுக்கு – நம்மெல்லோருடைய இதய பூர்வமான வணக்கங்களைச் செலுத்துவோம்! திருக்கோவிலூரின் அருகில் "தபோவனம்" நிறுவிய பரமஹம்ச சத்குரு மூர்த்தியவர்களுடைய கமல பாதங்களைப் பணிந்து போற்றி நாமனைவரும் நல் வாழ்வு பெறுவோம்!!

ஞான பானுவாகிய "தபோவனம் சுவாமிகள்" "மகா சமாதி" அடைந்துவிட்டார்கள்!! அவர்களது "அருளாட்சி" என்றும் தபோவனத்தில் நிலைத்து அவர்கள் நீடூழி வாழ்வார்களாக!!... அவர்களது– "அனுக்கிரக சக்தி" தபோவனம் வந்து பணிந்து போற்றக் கூடிய அடியவர்களுக்கு என்றென்றும் கிடைத்து எல்லா நலன்களையும் கொடுத்துக் காப்பாற்றுமாக!! அவர்களது அருட்கருணை "சர்வ வியாபகமாகப் பரவி" உலகம் செழித்து நல்லறம் நிலை நிற்குமாக!!

சத்குரு மூர்த்தியவர்கள் - மகாசமாதி எய்தி விட்டபோதிலும் அவர்களது " அருளுருவம் "

Koviloor Digital Library

அழியாது!" அவர்களது தூலவுடல் மறைந்து விட்டது!! ஆயினும் அவர்களது "திவ்ய ஆத்மா" என்றும் நிலைத்திருக்கும்! அருளுருவமாக-அங்கும் இங்கும் எங்குமாக இருந்து, அடியவர்களுக்கு அவர்கள் அனுக்கிரகம் செய்து கொண்டுதானிருப்பார்கள். அவர்களது "அருளாட்சி" தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும்!! குருதேவராகிய அவர்களை மனமுருகிப்போற்றிப் பணியக்கூடிய அடியவர்கள், அவர்களது - "அனுக்கிரக சக்தியைப்பெற்று" எல்லா நற்பலன்களையும் அடைந்து நல்வாழ்வு வாழ்வார்கள்!!

இது-முக்காலும் உண்மை!! வெறும் புகழ்ச்சி இல்லை!! அனுபவத்தில் பார்த்து நிதரிசனமாக உணர்ந்து கொள்ளக் கூடியதாகும்!!

சத்குரு தேவர் அவர்கள் நம்மிடையே இருந்த காலத்திலேயே "தபோவனம்" ஒரு புனித ஸ்தலமாக இருந்து வந்தது!! இனியும் அது அவ்வாறிருக்கும்!! உண்மையாகச் சொல்லுவதெனில் - இனித்தான் "தபோவனத்தின் மகிமை" மேலும் மேலும் உயர்ந்து- ஆச்சரியகரமான பல அனுபவங்கள் நமக்கொல்லாம் ஏற்படப் போகின்றது!!

(2)

சுவாமிகள் "பூரணத்துவம்" பெற்றுவிட்ட "மகாஞானி" என்பது யாவரும் அறிந்ததே!! அவர்கள் "மகாசமாதி" எய்திவிட்டதின் மூலம்- "துரியாதீதப் பெரு நிலைக்கும்" உயர்ந்து "பரத்வம்" பெற்றுவிட்டார்கள்!! அவர்களால் - ஆகாதது ஒன்று

Koviloor Digital Library

மில்லை! அவர்கள்-"மகாசித்தராக" உயர்ந்து நிற்கின் ருர்கள்!! சித்த புருஷர்கள்-இயற்கைக்கு அதீதமான அற்புதங்களைச் செய்கிருர்கள்!! இத்தகைய மகா சித்த புருஷர்களை-வேத சாஸ்திர புராணங்கள் "பரப் பிரம்மம்" என்றே வருணிக்கின்றன!! - ஏனெனில் அவர்கள் அனைத்துமே தாகுகி நின்று - பரப்பிரம்ம சொரூப நிலையைப் பெற்றுவிடுகின்ருர்கள் !!

சுவாமிகள் போன்ற "பரப்பிரம்ம சொரூபிகளை" வழிபடுவதின் மூலம், நாம் இறைவனையே வழிபடு பவர்கள் ஆகிவிடுகின்ருேம்! இத்தகைய "சத்குரு நாதர்கள்" மூலமாகவே - நாம் இறைச்சக்தியாகிய "அருட்சக்தியை" பெற்று மேல்நிலை பெற்றுவிட லாம்!!...அதனுலேதான்- "பரப்பிரம்ம சொரூபியாகிய" "ஞான சத்குரு நாதரவர்களை" பரம சத்குரு மூர்த்தி எனப் போற்றி நாம் வழிபடுகின்ருேம்!! வாழ்க சத்குரு தேவர் என வணங்கிப் போற்றுகின்ருேம்!!

சுவாமிகளைப் போன்ற பரமபுருஷர்கள்-அடிக்கடி தோன்றுவதில்லை! மாறிவரும் உலகத்தின் தேவை களுக்கேற்ப - ஏக தேசத்தில் ஒவ்வோர் நூற்ருண் டிலும் இத்தகையோர் தோன்றுகின்ருர்கள் !! குறிப் பிட்ட சில காரியங்களில் இவர்களின் பணி உலகத் திற்குத் தேவைப்படும்! அதைச் செய்து முடிப்பதற் காக - திருவருள் சம்மதத்தின் மீது - அப்போதைக் கப்போது அவர்கள் அவதரிக்கின்ருர்கள்!! அவர் களின் தெய்வீகப் பணி முடிவடைந்ததும், அவர்கள் மறைந்துவிடுவார்கள்!

அந்த முறையில் தோன்றி - உலக நன்மைக் காக அரும்பணியாற்றி மறைந்து விட்டவர்களே நமது சுவாமிகள் அவர்களும்!!

Koviloor Digital Library

வடக்கே - பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரும், தெற்கே வடலூர்ப் பெருமான் ஸ்ரீராமலிங்க அடிகளும் இருந்த காலத்திலேயே, நமது சுவாமிகளும் தோன்றினார்கள்! இளமையிலேயே இவர்கள் காஷ்மீரத்திலுள்ள ஜோதிர் மணி பீடாதிபதி சத்குரு சிவரத்தினகிரி சுவாமிகளின் பெருங்கருணைக்கு ஆளாகித் துறவறமேற்றுத் தவநிலை பெற்று, பாரத தேசத்தை பூப்பிரதட்சணம் செய்து வந்த காலத்தில் மேற்சொன்ன பெரியார் இருவர்களையும் சந்தித்துள்ளார்கள் என்றும் தெரிகின்றது!! இமயமலையிலும்-சேர்வராயன் மலையிலும் இவர்கள் பல்லாண்டுகள் கடுந்தவமியற்றி அருட் சித்தி பெற்றுமிருக்கின்றார்கள்!! பிறகு ஆட்டயாம் பட்டி, சூலூர், கல்லக்குடி, சித்தலிங்க மடம் ஆகிய பல ஊர்களில் தங்கியிருந்து பின்னர்-"தபோவனத்தை நிறுவி" சுமார் இருபதாண்டு காலம் அங்கு நிரந்தரமாகத் தங்கியுமிருந்தார்கள்! இப்போது "மகாசமாதி" எய்தி அங்கேயே திருக்கோயில் கொண்டும் விட்டார்கள்!!

சுவாமிகளது வயதை அறுதியிட்டுச் சொல்வதற்கில்லை! அந்தக் கணிப்பும் நமக்குத் தேவையானதல்ல!! இவர் காலத்தை வென்ற மகா புருஷர்! வெகு நீண்ட காலம் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் மிக அதிகமாக இவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்று நாம் நம்பலாம்!! இவர்களது பணி முடிந்ததும்-இவர்கள் மறைந்து விட்டார்கள்!!

(3)

இவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில்-நமது நாட்டின் நிலைமையை நாம் கவனித்தறிந்தோமானால்-

இவர்களின் பெரும் பணி எவ்வளவு மகத்தானது என்பதை நாம் அறிந்து கொள்ளக்கூடும்! நீண்ட கால அன்னிய ஆட்சியின் பயனுகவும், மேனுட்டு நாகரீக ஊடுருவலின் காரணமாகவும், நமது நாட்டிலே அறநெறி குலேந்து லோகாயத நிலே பெருகி விட்டிருந்தது! சமயக் கொள்கைகள் வலுவிழந்து- தெய்வ நம்பிக்கை குறைந்து வரலாயிற்று! வழிபாட்டு முறைகள் ஏளனத்துக்காளாயின !! சமயவாதிகள் கூட ஒருவருக்கொருவர் தர்க்கமிட்டு-தமது கடவுளே பெரியவர் எனக் கூறிக் குழப்பம் விளேவித்துக் கொண்டிருந்தார்கள்! இந்த நிலேயில்- நிரீசுவர வாதம் தலே எடுக்க ஆரம்பித்தது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் - அருட்சோதி வள்ளலாகிய ஸ்ரீராமலிங்க அடிகளும் தோன்றி சமரச ஞானக் கொள்கையைப் பரப்பி தெய்வ நம்பிக்கையை வளர்க்க உதவினுர்கள்!! ஸ்ரீவிவேகானந்தா சுவாமிகள் தோன்றி இந்தியாவின் மகத்தான "அத்வைததத்துவத்தை" மேனுடுகளிலும் பரப்பினுர்கள்! ஆன்மீக போதனேகளிலே மேனுட்டினரும் ஈடுபாடு கொண்டு மெய்யறிவு விளக்கத்துக்காக நமது நாட்டை நாடினுர்கள் ! நாடிக்கொண்டுமிருக்கின்றுர்கள் !!

இருந்தும்-இந்த இருபதாம் ஆண்டின் பிற்பகுதியிலே, லோகாய தஎண்ணங்களிலே நமது மக்களுக்கு ஆர்வம் மேலிட்டு - நமது சமயக் கொள்கைகளிலே பெரிய அளவுக்கு மக்கள் நம்பிக்கையிழக்கக் கூடிய துர்ப்பாக்கிய நிலேமை ஏற்பட்டு விட்டது! அதன் பயனுக நாட்டில் நாஸ்திக மனப்பான்மை தலே தூக்கியது! தெய்வ நம்பிக்கை-வெகுவாகக் குறைந்

Koviloor Digital Library

தது! பகுத்தறிவு வாதம் என்ற பெயரில் "கடவுட் கொள்கை" எதிர்க்கப்படலாயிற்று! இவ்வாறிருக்கும்போது தான் நமது சுவாமிகள் அவர்கள் - நீண்ட காலமாகச் சேமிக்கப்பட்ட அருள் நிதியின் பலத்தால் " தபோவனத்தை " நிறுவி கடவுட் கொள்கைக்கு ஆக்கம் தேடினுர்கள் !! சமய வழிபாடுகளிலே பேதம் கூடாதென விளக்குவதற்காக தபோவனத்திலே பல மூர்த்திகளுக்கும் சன்னிதிகள் ஏற்படுத்தினுர்கள் !! சுவாமிகளின் அனுக்கிரக சக்தியின் வல்லபத்தினுல் - மக்கள் பல்லாயிரக் கணக்கில் தபோவனத்தைத் தேடி வரலானுர்கள்!! விஞ்ஞான மோகத்தினுல் - மனக் குழப்ப மடைந்த பல படித்தவர்கள் கூட சுவாமிகளின் அறவுரைகளால் உண்மை விளங்கப் பெற்று மெய்யறிவு பெற்ருர்கள்! லௌகீக எண்ணங்கள் கொண்டு தபோவனத்தை நாடிய பலரும் திடமான பக்தர்களாக மாறினுர்கள் !! வழிபாட்டிலிருந்த பேத புத்தி மாறத் தலைப்பட்டது!

இவ்வாறு சுவாமிகள் தபோவனத்தின் மூலம் ஓர் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கின்ருர்கள்!! இது ஒரு நல்ல திருப்பம் என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ளலாம்!!

சுவாமிகள் "அத்வைத பரம்பரையிலே" வந்த பெரிய ஞானியாவார்!! ஆதிசங்கரரின் அடிச்சுவட்டையே பின்பற்றி "மூர்த்தி வழிபாட்டின்" முக்கியத்தையும் செய்கையின் மூலம் நன்கு நிலைநிறுத்தியிருக்கிருர்!! சங்கரர்-அத்வைதக் கொள்கையை (அதாவது 'எல்லாம் ஒன்று' என்ற பரப்பிரம்மதத்துவத்தை) நிலைநாட்டியவர்!! ஆயினும் அவர் மக்க

Koviloor Digital Library 5456 R65

ளின் மனுேபக்குவத்தையொட்டி "மூர்த்தி வழிபாடும்' அவசியம் என்று போதித்தார்!! தாமே பல மூர்த்தி களின் பெயரிலும் தியான சுலோகங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்!! அதே முறையில்தான் அத்வைதஞானி யாகிய — நமது சுவாமிகளும் மூர்த்தி வழிபாட்டை மக்கள் நலனுக்காக தபோவனத்திலும் ஏற்படுத்தி பக் தியைப் பரப்பி வந்தார்கள்!!

இன்று தமிழ் நாட்டில் பக்தி மார்க்கம் எவ்வளவு வேகத்தில் மறுமலர்ச்சியடைந்திருக்கிறது என்பதை நாம் நன்கு தெரிந்துகொண்டிருக்கின்ருேம்! இவை யெல்லாம் சுவாமிகள் போன்ற பெரியார்களின் அருட்பணியால் ஏற்பட்டது என்பதை நாம் சொல் லத் தேவையில்லை!!

(4)

சத்குருத்தேவர் சுவாமிகள் அவர்களுடைய 'மகத்துவம்' சொல்வதற்கரியதாகும்!! அவர்களது கருணைக்கு பாத்திரமாகி அனுபவத்திலே நலமடைந் தவர்களுக்கு அது நன்கு தெரியும்!! முக்கியமாக தபோவனத்துக்கு வந்து போய்க்கொண்டிருக்கும் பக்தர்களுக்கு இது மிக நன்ருகத் தெரியும்!! குரு தேவரவர்களைப் பணிந்து போற்றி - பல்லாயிரக் கணக்கான மக்கள் அனுக்ரகம் பெற்றுள்ளார்கள்!! வாழ்விலே நன்னிலை பெற்றவர்கள் பலரிருக்கிருர் கள்!! வியாதிகள் குணப்பட்டு நல்லாரோக்கியம் பெற்றவர்கள் பல பேர்!! வாழ்க்கையை ஒதுக்கி துறவறம் பெற்றவர்கள் சிலர்!! மெய் விளக்கம் பெற்று — அருளாசியடைந்தவர்கள் பலர்!! சிலர்

Koviloor Digital Library

மெய்யறிவளிக்கப்பட்டு மேல் நிலைக்கும் உயர்த்தப் பெற்றுள்ளார்கள்!! தரிசன விசேஷத்தினால் மட்டுமே தீவினைகள் நீங்கப்பெற்றவர்கள் வெகு பேர்!! கோரிக்கைகள் நிறைவேறி – குதூகலமடைந்தவர்களும் அநேகருண்டு!! இத்தகைய சுவாமிகளின் பக்தர்களில் அடியவன் மிக மிகச் சிறியவன்!! ஒன்றுக்கும் பற்றாத இச்சிறியவனைக் கருணைப் பெருக்கால் தடுத்தாட்கொண்டு 'அருள்வழியில்' நிலைநிறுத்தியதோடல்லாமல் — எல்லா வகைகளிலும் நன்னிலைமைக்கு ஆளாக்கிய சத்குருத்தேவர் அவர்களுக்கு அடியேன் என்ன கைமாறு செய்ய இயலும்? அவர்களிட்ட கட்டளைகளின்படி நடந்து "அன்பர்பணி" செய்வதொன்றே இச்சிறியவனது கடமையாக இருக்கும்!! அதனை சுவாமிகளின் ஆசீர்வாத பலத்தால் நன்கு செய்து நலம் பெற முயற்சிப்பேன்!!

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்
பராபரமே"

என்று கூறினார் சமரசஞானப் பெருந்தகையாராகிய தாயுமான அடிகள்!! நமது சுவாமிகளின் திருவுள்ளக் கருத்தும் அதுவேதான் — என்பது வெளிப்படை!!

குருவே சிவமெனக் கூறினன் நந்தி — என்று கூறினார் திருமந்திர ஆசிரியராகிய "திருமூல தேவ நாயனார்" குருபிரான் தான் – சிவ பரம்பொருளாகிய இறைவன் என்பது அதன் கருத்து!!

வடமொழியிலுள்ள 'குருகீதை' இதனைக் கீழ் கண்டவாறு மேலும் விளக்கமாக வலியுறுத்துகின்றது:—

Koviloor Digital Library

1. குருவே பிரம்மா! குருவே விஷ்ணு! குருவே மகாதேவனுகிய தேவன்! குருவே ஏகமாகிய பரப்பிரம்மம்! அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்!!

2. குருவிலும் மேலான தத்துவமில்லை! குருவிலும் மேலான தவமில்லை! அத்தன்மைய குருவிற்கு நமஸ்காரம்!!

3. தியானத்திற்கு மூலம் குருவடிவம்! பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள்! மந்திரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம்! முக்திக்கு மூலம் குருவின் கிருபை!!

"குருநாமமே" நாம் வந்திக்க வேண்டிய திருநாமம்! அதைக்கொண்டே நாம் கடைத்தேறி விடலாம்!

(5)

"அந்தகாரத்திலிருந்து - என்னை ஒளிநிலைக்கு அழைத்துச் செல்" என்பது உபநிஷத மகா வாக்கியம்! பிரபஞ்சமாயையாகிய இருட்டிலிருந்து-ஒளி நிலையாகிய "அருள்நிலைக்கு" நம்மை இட்டுச்செல்லக் கூடியவர்களையே "சத்குரு" என்று கூறுவது மரபு! "குரு" என்ற வார்த்தைக்கே இருட்டிலிருந்து விலக்கி நம்மை ஒளிநிலைக்கு ஆளாக்குபவர் என்பது தான் பொருள்! அதாவது-நமது அஞ்ஞானத்தை நீக்கி, மெஞ்ஞான நிலைக்கு ஆளாக்குபவரே-குருவாகும்!

குருவைவிட மேலானவர்கள் எவருமில்லை! குரு "இறைவனையும் விடப் பெரியவர்" என்று வேத சாஸ்திரபுராணங்கள் முடிவுகட்டிக் கூறுகின்றன! குருவே-நமக்கு இறைநிலையை உணர்த்தக்கூடியவர்!

Koviloor Digital Library

குருஇல்லாவிட்டால் இறைவனாகிய கடவுளை நாம் அறியமுடியாது! எனவேதான் குருவே கடவுள் என்றும் குரு கடவுளை விடப் பெரியவர் என்றும் கூறப்பட்டுள்ளது!! குருவின் மகத்துவத் திற்கு முன்பு கடவுளின் மகத்துவம் கூடப் பெரிதாக மாட்டாது!!

சத்குருவின் வழி காட்டுதலில்லாமல் எவரும் "தன்னையும் - தனக்காதாரத்தலைவனையும்" தெரிந்து கொள்ள முடியாது! குருவின் கிருபையில்லாது போனால்-முக்திக்கு வழியிருக்காது! குருதான் நமக்கு வழிகாட்டி! அவருடைய அருளில்லாது போனால் எதுவும் சித்திக்கமாட்டாது! குருவின் மூலமாகவே கடவுட்சக்தியாகிய 'அருட்சக்தியை" நாம்பெற இயலும்! இறைவனுக்கும் நமக்கும் இடையே இருந்து தெய்வ அருளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவரே குரு பெருமான்!!

குரு பெருமானிடம் அசைக்க முடியாத பெரு நம்பிக்கையிருந்தால் மட்டுமே-நாம் குருவின் திருவருளைப் பெறுதல் கூடும்! அத்தகைய நம்பிக்கை எவர்களுக்கு இருக்கின்றதோ - அவர்களின் சகல பொறுப்பையும் குருதேவர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, அவர்களின் நலன்களைப் பெருக்குவதோடு மட்டு மில்லாமல் - அவர்கள் அருள்வழியிலுயர்ந்து இறை நிலைபெறவும் கருணை புரிந்து உதவுவார்கள்! குருதேவரிடம் விஸ்வாசம் கொண்டு அவர் வழி நின்றோமானால்-அவர் நமக்கெல்லாம் சகல நலன்

Koviloor Digital Library

களையும் கொடுத்து நல்வழிக்கும் ஆளாக்கிவைப்பார்! அதற்கு குருவின் திருவடிகளே துணை !!

குருவினிடம் ''சரணாகதி'' செய்து கொள்ளுவதே மேலான மார்க்கம் ! குருபக்தி செய்வதினாலே நாம் வாழ்விலும் பல நலன்களை அடையலாம்! வாழ்க்கைப்பயனாகிய வீடு பெறுதலிலும், வழி காட்டுதல் பெற்று அருள் நிலை அடையலாம்!!

ஆகவே-பற்றேதுமில்லாத குருவின் - சரணாரவிந்தங்களைப்பற்றிக் கொண்டு நாம் வழிபடுவோமானால், வேண்டியனவற்றை வேண்டியாங்கு பெற்று இம்மையிலும்-மறுமையிலும் நாம் சுகமடையலாம் !!

''சச்சிதானந்த சொரூபமே" கடவுள் நிலையின் இலக்கணம்! "சத்" என்பது என்றும் நிலையாகயிருக்கும் உயர்ந்த இருப்பு! "சித்'' என்பது பூரணத்வம் பெற்ற அறிவு! ஆனந்தம் என்பது அந்தமில்லாத - எல்லையற்ற "ஆனந்தநிலை" என்றென்றும் நிலைத்திருக்க கூடியது இந்த நிலை. தான் என்பது வேதவாக்கியம்! ஏனையவை எதுவும் நிலைத்துநிற்கக் கூடியவையல்ல ! இந்தநிலைக்கு உயர்ந்து பரம்பொருளைத்தன்னில் தானாக உணர்ந்து நிற்பவர்களே ஞானிகள் ! அந்த அனுபவாதீத ஆனந்த நிலையிலே ஒன்றிமகாசமாதி எய்தி விட்டவர்களே நமது சுவாமிகள்! அந்த இயல்பிலே–தமது பெயருக் கேற்ப நமது சுவாமிகள் ஞான-ஆனந்த- "கிரியாகவே'' என்று மிருந்து நம் அனைவருக்கும் ''அனுக்ரகம்'' புரிந்துகொண்டு தானிருப்பார்கள்!

Koviloor Digital Library

தோன்ருத்துணையாகயிருந்து சுவாமி கள் நம க்கு அருள்புரிந்து வருவார்கள் என்ற நம்பிக்கை கொண்டு, நாமனைவரும் அவர்களது திருவடிகளை மனதில் பற்றிக்கொண்டு-வழிபட்டு நல்வாழ்வும் நற் பேறும் பெறுவோமாக! வாழ்க சத்குருதேவர்! வாழ்கசத்குருதேவரவர்களின் நல்லருள்! வாழ்க தபோவனம் வரக்கூடிய அடியவர்கள்! வாழ்க இவ்வையகம்! வாழ்க-வாழ்கவே !!

எல்லோரும் நன்ருகயிருக்கவேண்டும்! அதற்கு ஈசன் கணேசன் துணை செய்ய வேண்டும்!!

முற்றும்

Koviloor Digital Library

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

—*திருமந்திரம்*

Koviloor Digital Library

Printed at

Madras Ripon Press, Pudukkottai.